செ.வெ.எண்.95 நாள் - 29.01.10

செய்தி வெளியீடு – 29.1.2010

**“திராவிட மொழிகள்” எனும் சொல்லாக்கத்தை முதன்முதல் உருவாக்கி தமிழ் மொழியை “உயர்தனிச் செம்மொழி” என உலகறியச் செய்த அறிஞர் கால்டுவெல் நெல்லையில் வாழ்ந்த இல்லம் அரசு நினைவு இல்லமாகிறது !**

# முதலமைச்சர் கலைஞர் ஆணை !

இங்கிலாந்து நாட்டில் பிறந்து கிறித்தவ சமயத் தொண்டு புரிவதற்காக 1838ஆம் ஆண்டில் சென்னைக்கு வந்த இராபர்ட் கால்டுவெல் அவர்கள், நெல்லை மாவட்டம் இடையன்குடி என்னுமிடத்தில் தங்கிச் சமயப் பணிகளாற்றி மறைந்தார்.

கால்டுவெல் அவர்கள் தமிழகத்திற்கு வந்தபின் தமிழ்மொழி கற்று, அதன் இலக்கண இலக்கியங்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர்; தமிழ் மொழி மட்டுமல்லாமல், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற பிற திராவிட மொழிகளையும் கற்று, இம்மொழிகளுக்கிடையில் உள்ள ஒற்றுமைகளை ஆய்வு செய்தவர்; அதன் பயனாக, ‘திராவிட மொழிகள்’ என்னும் சொல்லாக்கத்தை முதன்முதல் உருவாக்கி உலகுக்கு அறிமுகம் செய்தவர் அவர்; அத்துடன், “திராவிட மொழிகள் அனைத்திலும், உயர் தனிச் செம்மொழியாய் நிலைபெற்று விளங்கும் தமிழ், தன்னிடையே இடம் பெற்றிருக்கும் சமஸ்கிருதச் சொற்களை அறவே ஒழித்துவிட்டு உயிர் வாழ்வதோடு அவற்றின் துணையை ஒருசிறிதும் வேண்டாமல் வளம் பெற்று வளர்வதும் இயலும்” என்னும் வரலாறு போற்றும் மகத்தான உண்மையையும் நிலைநாட்டி உலகறியச் செய்தவர் கால்டுவெல். அவர் படைத்த “திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்” என்னும் நூல் தமிழ்மொழியின் தனித்தன்மையையும், சிறப்பையும் உலகுக்கு வெளிப்படுத்தியதுடன், தமிழ்மொழி பற்றிய தொன்மைச் சிறப்பினையும் பறைசாற்றுகிறது.

இவ்வாறு தமிழ்மொழிக்கு மாபெரும் பெருமைகளைச் சேர்த்த இராபர்ட் கால்டுவெல் அவர்களைப் போற்றும் வகையில், அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சரான பின், 1968ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது, சென்னைக் கடற்கரையில் காமராஜர் சாலையில் சிலை அமைத்துச் சிறப்பிக்கப்பட்டது.

செம்மொழியாம் தமிழ் மொழிக்குச் சிறந்த மணிமகுடம் சூட்டிய மாமேதை கால்டுவெல் அவர்களுக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில், நெல்லை மாவட்டம், இடையன்குடியில் அவர் வாழ்ந்து மறைந்த இல்லத்தை, அவரது நினைவைப் போற்றும் வகையில், அரசு நினைவு இல்லமாக மேம்படுத்திப் பராமரித்திட முதலமைச்சர் கலைஞர் இன்று (29.1.2010) ஆணையிட்டுள்ளார்.

*****

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9